1984 பிப்ரவரி 17]

தலைஞாயிறில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

* 8. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஒன்றினை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அதைப் போல பணிமனை இல்லாத பகுதிகளில் புதிய பேருந்துகள் விடவும், பணிமனைகள் இருக்கும் இடங்களில், புதிய பேருந்துகள் இருந்தாலும், ரிப்போர் செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் புதிய பேருந்துகளை விடுகிற யோசனை அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பணிமனை இல்லாத பகுதி என்று சொல்ல முடியாது. எங்கெங்கே பணிமனை இல்லையோ அங்குள்ள பேருந்துகள் பக்கத்திலே உள்ள பணிமனைகளுக்கு பாராமரிப்புக்காகச் செல்கின்றன. எல்லா வண்டிகளும் பணிமனையைத் தொட்டுச் செல்ல வேண்டிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம்.

கொடுமுடியிலிருந்து வாய்க்கால் வெட்டுதல்.

* 9. வினா—திரு. ம. சங்கரலிங்கம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

காவிரியின் வெள்ள நீரை, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்குக் கொண்டு செல்ல, கொடுமுடியிலிருந்து வாய்க்கால் வெட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மழைக் காலங்களில் காவிரியில் கிடைக்கும் வெள்ள நீரை வீணாக்காமல் பயனுள்ள வகையில் உபயோகப் படுத்துவது குறித்த முன்னோடி அறிக்கை தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** காவிரி ஆற்றிலிருந்து மழைக் காலத்தில் வருகிற மிகுதி நீரை இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லக்கூடிய திட்டம் எவ்வளவு காலமாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது? எப்போது ஆரம்பிக்கப்பட்டு அமுல்நடத்தப்படும்?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** காவிரி ஆற்றின் தண்ணீரை வறட்சியான பகுதிகளுக்குக் கொண்டு செல்லக்கூடிய திட்டம் தலைமைப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது. இதை இரண்டு கட்டமாக எடுத்துக்கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதற்கட்டமாக புதுக்கோட்டை வட்டாரத்திற்கு காவிரி வெள்ள நீரை வெள்ள நீர்க் கால்வாய் மூலம் கொண்டு செல்வது என்பது. இந்த முதற்கட்டம் இன்னும் முடியவில்லை. ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த முதற்கட்டத்திற்கும், இரண்டாவது கட்டத்திற்கும் சேர்ந்து 188 கோடி ரூபாய் செலவாகும் என்று தகவல் தரப்பட்டிருக்கிறது. 188 கோடி ரூபாய்க்குப் பணிகள் மேற்கொண்டாலும், இது வெள்ளக் காலத்திலே மட்டும் தான் பயனுள்ளதாக இருக்கும். இருப்பினும் உரிய நடவடிக்கையை முறையாக வாய்ப்பு ஏற்படும்போது எடுக்க அரசு விரும்புகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நான் அறிந்த வரையில், ஐந்தாண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனையை விரைவில் செய்து, இது ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டமா அல்லது தள்ளப்பட வேண்டிய திட்டமா என்பதை முடிவு செய்ய வேண்டும். இப்படி காலம் கடத்துவதால் இப்போது 188 கோடி ரூபாய் என்று திட்டமிட்டிருந்தாலும், பின்பு 588 கோடி ரூபாய் என்ற நிலைக்குப் போய்க்கொண்டிருக்கும். ஆகவே ஆக்கபூர்வமாகச் செய்ய வேண்டிய திட்டங்களைக் காலம் தாழ்த்தாமல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** இந்த அரசைப் பொறுத்த வரையில், ஆக்கபூர்வமான திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்திக் கொண்டிருக்கிறது. காவிரி பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். காவிரியில் வெள்ளம் ஏற்படும் காலங்களில்தான் இப்படிப்பட்ட திட்டங்களால் வறண்ட பகுதிகளுக்குப் பயன் கிடைக்கும். ஆகவே அதைப்பற்றி அவசர அவசரமாக விரைந்து ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.